திரு. சு. துரைசாமி: 100 ஏக்கர்களுக்கு மேல் வைத்துக்கொள்ளலாம் என்று யார் யாருக்கு விதிவிலக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: கேள்வி, மேய்ச்சல் காடுகளுக்காக 50 ஏக்கருக்கு மேல் எவ்வளவு பேருக்கு விதிவிலக்குக் கொடுக்கப்பட்டது என்பது தான். கனம் உறுப்பினர் அவர்கள் 100 ஏக்கர்களுக்கு மேல் யார் யாருக்குக் கொடுக்கப்பட்டது என்று கேட்கிறார்கள். அதற்குவிடை

Thiru N. S. S. Manradiar, Palayakottai—794 acres 40 cents.

Thirumathi Nallammal, wife of Thiru Kolandaisami Gounder, Sankaranandampalayam village—182 acres 62 cents.

Thiru Anoor Sambanda Sarkarai *alias* Sivakumar, Palayakottai—961 acres 25 cents.

Nandakumar Dairy Farm, Ramapattinam—105 acres 70 cents.

Loans given by Industrial Investment Corporation

* 30. Q.—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the total amount of loan given by the Tamil Nadu Industrial Investment Corporation to the enterpreneurs of Tamil Nadu from 1965–1970; and

(*b*) the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) & (இ)—

தமிழ் நாடு தொழில் முதலீட்டுக் கழகம் வழங்கிய கடன்களின் தொகை (ஆண்டு வாரியாக) பின்வருமாறு:

ஆண்டு	ரூபாய் லட்சத்தில்
1964-65	333.60
1965-66	387.50
1966-67	261.35
1967-68	72.76
1968-69	193.25
1969-70	200.06

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் மூலமாக பெறப்படுகின்ற கடன் தொகைகள் பரவலாகத் தொழிற்துறையிலே பிற்பட்ட பகுதிகளுக்குச் செல்கிறதா அல்லது சென்னை, கோயம்புத்தூர் போன்ற பகுதிகளுக்கு மட்டுமே வழங்கப்பட்டிருக்கிறதா என்பதை அமைச்சர் சொல்வாரா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தொழில்கள் நிறைந்த இடங்களிலே இருந்துதான் மனுக்கள் அதிகமாக வருகின்றன. பின்தங்கிய பகுதிகளிலே இருந்து தொடங்குவதற்கு முன்வந்தால் வட்டிச் சலுகையோடு பணம் கொடுக்கப்படும் என்பதை அரசாங்கம் ஏற்கனவே தெரிவித்திருக்கிறது. ஆகவே, பின் தங்கிய பகுதிகளில் தொழில் வளர்ச்சி ஏற்படுவதற்காக தனிச் சலுகைகள் இந்த நிறுவனத்தின் மூலமாக ஏற்கனவே இருக்கிறது.

THIRU M. A. LATHEEF : Will the Hon. Minister for Industries be pleased to enumerate the exact amount that has been given to basic, secondary and tertiary industries because the figures provided by the Hon. Minister for Industries state generally the loans granted to various entrepreneurs. May I know the exact amount granted to basic, secondary and tertiary industries?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சிறிய தொழில்கள், பெரிய தொழில்கள், மீடியம் தொழில்களுக்கு எவ்வளவு எவ்வளவு என்ற விவரம் என்னிடத்திலே இல்லை.

திரு. கே. ஏ. அப்துல் வகாப் : இந்தக் கடன்கள் கொடுக்கப்பட்டதற்குப் பிறகு எத்தனை சதவீதம் தமிழ்நாட்டினுடைய தொழில் வளர்ச்சி அதிகமாகி இருக்கிறது என்பதைத் தெரிவிப்பார்களா? கடன்களுக்குத் தகுந்தமுறையில் வளர்ச்சி ஏற்படுகிறதா என்பதைக் கவனிக்க ஒரு சர்வே நடத்த அரசு முயற்சிக்குமா ? வட்டியில்லாத கடன் பின்தங்கிய பகுதிகளுக்குக் கொடுக்கப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படியென்றால் அது முழுமையும் வட்டியில்லாத கடனா ? அல்லது குறைந்த வட்டியில் கடனா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நான் வட்டியே இல்லை என்று சொல்லவில்லை. வட்டிச் சலுகை என்றுதான் சொன்னேன். மத்திய அரசு மாநில அரசுகளால் இப்படிப்பட்ட தொழில் நிறுவனங்களின் மூலமும் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளின் மூலமும் கொடுக்கப்படுகின்ற நிதியினுடைய மொத்த அளவு கூடும்பொழுது அதன் மூலம் தொழில் வளர்ச்சி அதிகமாகும் என்பது

1972 டிசம்பர் 4]

பொருளாதார நிபுணர்களின் கருத்து. அகில இந்திய ரீதியிலே பார்த்தால் தமிழ் நாடு தொழில் வளர்ச்சியில் ஒரு சிறப்பான இடத்தைப் பெற்று இருக்கிறது.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவர் அவர்களே, எந்த எந்தத் தொழில்களுக்குக் கடன் வசதிகள் கொடுக்கப்படுகின்றன என்பதைப்பற்றிய தெளிவான ஒரு பட்டியல் இல்லாத குறைபாடு இருக்கிறது. அதை மாற்றியமைத்தாவது ஒரு முழுமையான பட்டியலை அமைத்து வெளியிட அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அப்படி ஒரு குறைபாடு இருப்பதாகத் தெரியவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும், இந்தத் துறையின் மானியம் இங்கே விவாதத்திற்கு வந்தபொழுது தொழிழில் துறை பற்றிய பல்வேறுன கடன் வசதிகளையும் கடன்வசதிகள் அளிக்கின்ற நிறுவனங்கள்பற்றிய விவரங்களையும் அங்கத்தினர்கள் பொதுமக்களுக்குத் தெரியப் படுத்தி அரசாங்கத்தினுடைய உதவியைப் பெறவேண்டுமென்று எடுத்துச் சொன்னேன். அதை மீண்டும் இன்றைக்கு நினைவுபடுத்துகிறேன்.

Sales Centre of Small Industries Corporation

• 31. *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the **Minister** for Industries be pleased to state—

(*a*) whether any sales counter has been opened by Tamil **Nadu Small Industries Corporation Limited in Madras City in April 1972; and**

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) 21—4—1972-ஆம் நாளன்று தமிழ்நாடு சிறு தொழில்கள் நிறுவனம் ஆயிரம் விளக்கு பகுதியில் அண்ணா சாலையில், 4/141 என் இடத்தில் ஒரு "விற்பனை நிலையம்" திறந்துள்ளது. 21—4—1972-லிருந்து 24—6—1972 வரை விற்பனையான தொகை ரூ. 45,995.91 (ரூபாய் நாற்பத்தைந்தாயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூற்று ஐந்தும், புதிய காசுகள் தொண்ணூற்றொன்றும்).

Railway line in Nilgiris district

• 32. *Q.*—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether this Government have represented to the Centre during 1972 not to dismantle the mountain railway in Nilgiris district?